This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores

# சுராவின்

பொதுத்தேர்வு பதிப்பு (2021-22)

# சமூக அறிவியல்

## 10 ஆம் வகுப்பு

13.08.2021 அன்று தமிழ்நாடு அரசு வெளியிட்ட குறைக்கப்பட்ட (முன்னுரிமை) பாடத்திட்டம் (அரசாணை (Ms).No 126) 2021–22 அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

☞ சுராவின் மாதிரி வினாத்தாள்–(2021–22) குறைக்கப்பட்ட பாடங்களின் அடிப்படையில் தரப்பட்டுள்ளது.

**சிறப்பம்சங்கள்**

- ✫ குறைக்கப்பட்ட பாடப்பகுதிகளிலுள்ள அனைத்து வினாக்களுக்கும் எளிமையான விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- ✫ **Sept-2020 தேர்வு, காலாண்டுத்தேர்வு-2019, அரையாண்டுத்தேர்வு-2019 மற்றும் அரசு மாதிரி வினாத்தாள்** ஆகியவற்றின் வினாக்கள் அந்தந்த பாடப்பகுதிகளில் குறிப்பிட்டுத் தரப்பட்டுள்ளன.
- ✫ PTA-ஆறு வினாத்தாள்களின் வினாக்களும் அந்தந்த பாடப்பகுதிகளில் குறிப்பிட்டுத் தரப்பட்டுள்ளன.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores

**2021-22 புதிய பதிப்பு**
**© வெளியீட்டாளர்கள்**

**All rights reserved © SURA Publications.**
No part of this book may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, digitally, electronically, mechanically, photocopying, recorded or otherwise, without the written permission of the publishers. Strict action will be taken.

ISBN : 978-93-5330-411-9
குறியீட்டு எண். **RPS_008**

| எழுதி வழங்கியவர் | திருத்தியவர் |
|---|---|
| திருமதி. ப. சுபத்ரா, M.A., M.Ed. சென்னை | திரு. க. கண்ணப்பன், M.A., B.Ed., சென்னை |
| திரு. அ. சண்முகம், M.A, B,Ed. நாமக்கல் | **மதிப்பாளர்** |
| திருமதி. த. அகிலாண்டேஸ்வரி, M.A, M.Ed. சென்னை | முனைவர். வ. வேல்முருகன் M.A., M.Phil., Ph.D. துறைத்தலைவர், சேலம் |

**Also available for Std - X**

Guides :
- Sura's Tamil
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Science (EM/TM)
- Sura's Social Science (EM/TM)

**தலைமை அலுவலகம்**

**சுரா பப்ளிகேஷன்ஸ்**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர்,
சென்னை-600 040.

**Phones** : 91-44-4862 9977, 486 27755
**Mobile** : 96001 75757 / 81242 01000 / 81243 01000
**Whatsapp** : 81242 01000
**e-mail** : orders@surabooks.com
**website** : www.surabooks.com

**மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு**
புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 9600175757 / 8124301000
வாட்ஸ்அப் : 8124201000 / 9840926027
ஆன்லைன் வலைதளம் : www.surabooks.com
பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in
இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores

# பொருளடக்கம்

## வரலாறு


| | | |
|---|---|---|
| அலகு 1 | முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும் | 1-8 |
| அலகு 2 | இரு உலகப் போர்களுக்கு இடையில் உலகம் | 9-12 |
| அலகு 3 | இரண்டாம் உலகப்போர் | 13-18 |
| அலகு 4 | இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம் | 19-20 |
| அலகு 5 | 19ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் | 21-28 |
| அலகு 6 | ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால கிளர்ச்சிகள் | 29-36 |
| அலகு 7 | காலனியத்துக்கு எதிரான இயக்கங்களும் தேசியத்தின் தோற்றமும் | 37-44 |
| அலகு 8 | தேசியம்: காந்திய காலகட்டம் | 45-54 |
| அலகு 9 | தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம் | 55-60 |
| அலகு 10 | தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள் | 61-70 |


## புவியியல்


| | | |
|---|---|---|
| அலகு 1 | இந்தியா - அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு | 71-80 |
| அலகு 2 | இந்தியா - காலநிலை மற்றும் இயற்கைத் தாவரங்கள் | 81-86 |
| அலகு 3 | இந்தியா - வேளாண்மை | 87-96 |
| அலகு 4 | இந்தியா - வளங்கள் மற்றும் தொழிலகங்கள் | 97-103 |
| அலகு 5 | இந்தியா - மக்கள் தொகை, போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் வணிகம் | 104-112 |
| அலகு 6 | தமிழ்நாடு - இயற்கைப் பிரிவுகள் | 113-121 |
| அலகு 7 | தமிழ்நாடு - மானுடப் புவியியல் | 122-131 |


www.surabooks.com



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores

## குடிமையியல்


| | | |
|---|---|---|
| அலகு 1 | இந்திய அரசியலமைப்பு | 132-137 |
| அலகு 2 | நடுவண் அரசு | 138-143 |
| அலகு 3 | மாநில அரசு | 144-150 |
| அலகு 4 | இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை | 151-156 |
| அலகு 5 | இந்தியாவின் சர்வதேச உறவுகள் | 157-159 |


## பொருளியல்


| | | |
|---|---|---|
| அலகு 1 | மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி: ஓர் அறிமுகம் | 160-164 |
| அலகு 2 | உலகமயமாதல் மற்றும் வர்த்தகம் | 165-166 |
| அலகு 3 | உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து | 167-172 |
| அலகு 4 | அரசாங்கமும் வரிகளும் | 173-178 |
| அலகு 5 | தமிழ்நாட்டில் தொழில்துறை தொகுப்புகள் | 179-182 |


www.surabooks.com



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



# அலகு 1 முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும்




## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்

**1. முதல் உலகப்போரின் இறுதியில் நிலைகுலைந்து போன மூன்று பெரும் பேரரசுகள் யாவை?**

அ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, உதுமானியர்
ஆ) ஜெர்மனி, ஆஸ்திரிய- ஹங்கேரி, ரஷ்யா
இ) ஸ்பெயின், போர்ச்சுகல், இத்தாலி
ஈ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, இத்தாலி **[விடை : அ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, உதுமானியர்]**

**2. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந்தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது?**

அ) சீனா ஆ) ஜப்பான் இ) கொரியா ஈ) மங்கோலியா **[விடை: ஆ) ஜப்பான்]**

**3. “ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்” எனக் கூறியவர் யார்?** *PTA-6*

அ) லெனின் ஆ) மார்க்ஸ்
இ) சன் யாட் சென் ஈ) மா சே துங் **[விடை: அ) லெனின்]**

**4. மார்ன் போர் எதற்காக நினைவு கூறப்படுகிறது?**

அ) ஆகாயப் போர்முறை ஆ) பதுங்குக் குழிப் போர்முறை
இ) நீர்மூழ்கிக் கப்பல் போர்முறை ஈ) கடற்படைப் போர்முறை

**[விடை : ஆ) பதுங்குக் குழிப் போர்முறை]**

**5. பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச்செயலர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?**

அ) பிரிட்டன் ஆ) பிரான்ஸ் இ) டச்சு ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

**[விடை: அ) பிரிட்டன்]**

**6. பின்லாந்தைத் தாக்கியதற்காக பன்னாட்டுச் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது?**

அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) இத்தாலி ஈ) பிரான்ஸ் **[விடை: ஆ) ரஷ்யா]**

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. ________ ஆம் ஆண்டில் ஜப்பான் சீனாவுடன் வலுக்கட்டாயமாகப் போரிட்டது. **[விடை: 1894]**
2. 1913ஆம் ஆண்டு மே மாதம் கையெழுத்திடப்பட்ட ____________ உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதியநாடு உருவாக்கப்பட்டது. **[விடை: இலண்டன்]**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



3. ______ ஆண்டில் ஜப்பான் இங்கிலாந்துடன் நட்பினை ஒப்பந்தம் செய்து கொண்டது. **[விடை: 1902]**

4. பால்கனில் ________ நாடு பல்வகை இனமக்களைக் கொண்டிருந்தது. **[விடை: மாசிடோனியா]**

5. டானென்பர்க் போரில் ___________ பேரிழப்புகளுக்கு உள்ளானது. **[விடை: ரஷ்யா]**

6. பாரிஸ் அமைதி மாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கேற்ற பிரான்ஸின் பிரதமர் ___________ ஆவார். **[விடை: கிளமென்சோ]**

7. _______ ஆம் ஆண்டில் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. **[விடை: 1925]** *PTA–1*

## III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்

1. i) துருக்கியப் பேரரசு, பால்கனில் துருக்கியரல்லாத பல இனமக்களைக் கொண்டிருந்தது.
   ii) துருக்கி மையநாடுகள் பக்கம் நின்று போரிட்டது.
   iii) பிரிட்டன் துருக்கியைத் தாக்கி கான்ஸ்டாண்டிநோபிளைக் கைப்பற்றியது.
   iv) சூயஸ் கால்வாயைத் தாக்க துருக்கி மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.
   அ) (i), (ii) ஆகியன சரி   ஆ) (i), (iii) ஆகியன சரி
   இ) (iv) சரி   ஈ) (i), (ii), (iv) ஆகியன சரி
   **[விடை: ஈ) (i), (ii) (iv) ஆகியன சரி]**

2. கூற்று : **ஜெர்மனியும் அமெரிக்காவும் மலிவான தொழிற்சாலைப் பொருள்களை உற்பத்தி செய்து இங்கிலாந்தின் சந்தையைக் கைப்பற்றின.**
   காரணம் : **இருநாடுகளும் தங்கள் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருள்களை உற்பத்தி செய்தன.**
   அ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் சரி.
   ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.
   இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் தவறு.
   ஈ) காரணம் சரி, ஆனால் கூற்று தவறு.
   **[விடை: ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.]**

3. கூற்று : **ஆப்பிரிக்காவில் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காக ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்ட முதற்கட்ட முயற்சிகள் ரத்தக்களரியான போர்களில் முடிந்தன.**
   காரணம் : **சொந்த நாட்டு மக்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு இருந்தது.**
   அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி.
   ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.
   இ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு.
   ஈ) காரணம் சரி, ஆனால் கூற்று தவறு. **[விடை: அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி]**

## IV. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | பிரெஸ்ட் – லிடோவஸ்க் உடன்படிக்கை | - | வெர்செய்ல்ஸ் |
| 2. | ஜிங்கோயிசம் | - | துருக்கி |
| 3. | கமால் பாட்சா | - | ரஷ்யாவும் ஜெர்மனியும் |
| 4. | எம்டன் | - | இங்கிலாந்து |
| 5. | கண்ணாடி மாளிகை | - | சென்னை |





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores





**விடை:**

| | | | |
|---|---|---|---|
| 1. | பிரெஸ்ட் – லிடோவஸ்க் உடன்படிக்கை | - | ரஷ்யாவும் ஜெர்மனியும் |
| 2. | ஜிங்கோயிசம் | - | இங்கிலாந்து |
| 3. | கமால் பாட்சா | - | துருக்கி |
| 4. | எம்டன் | - | சென்னை |
| 5. | கண்ணாடி மாளிகை | - | வெர்செய்ல்ஸ் |

## V. சுருக்கமாக விடையளிக்கவும்

**1. சீன – ஜப்பானியப் போரின் முக்கியத்துவத்தை நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய்?**

(i) 1894 இல் ஜப்பான் சீனாவின் மீது வலுக்கட்டாயமாக ஒரு போரை மேற்கொண்டது. இச்சீன – ஜப்பானியப் போரில் (1894 - 1895 ) சீனாவைச் சிறிய நாடான ஜப்பான் தோற்கடித்தது உலகை வியக்க வைத்தது.

(ii) தொடர்ந்து ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய வல்லரசுகளின் எச்சரிக்கையை மீறி ஜப்பான் லியோடங் தீபகற்பத்தை ஆர்தர் துறைமுகத்துடன் சேர்த்து இணைத்துக் கொண்டது.

(iii) இந்த நடவடிக்கை மூலம் கிழக்கு ஆசியாவில் தானே வலிமை அரசு என ஜப்பான் மெய்ப்பித்தது.

**2. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.** *QY, HY-2019*

**மூவர் கூட்டு நாடுகளின் பெயர்கள் :** இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா.

**3. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?**

**ஐரோப்பியப் போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் :**

(i) இங்கிலாந்து – ஆரவாரமான நாட்டுப்பற்று (jingoism)

(ii) பிரான்ஸ் – வெறிகொண்ட நாட்டுப்பற்று (chauvinism)

(iii) ஜெர்மனி–ஜெர்மானியக் கலாச்சாரத்தை மிக உயர்வாக நினைப்பது (Kultur)

**4. பதுங்குக் குழிப்போர் முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?** *PTA–3*

**பதுங்குக் குழிப்போர் :**

(i) போர்வீரர்களால் தோண்டப்படும் பதுங்குக் குழிகள் எதிரிகளின் சுடுதலில் இருந்து தங்களை காத்துக் கொண்டு பாதுகாப்பாக நிற்க உதவின.

(ii) பிரதானப் பதுங்குக்குழிகள் ஒன்றோடொன்றும் பின்புறமுள்ள குழிகளோடும் இணைக்கப்பட்டிருக்கும். அவற்றின் வழியாக உணவு ஆயுதங்கள், கடிதங்கள், ஆணைகள் ஆகியவை வந்துசேரும். புதிய வீரர்களும் வந்து சேர்வர்.

**5. முஸ்தபா கமால் பாட்சா வகித்தப் பாத்திரமென்ன?**

(i) துருக்கி மீண்டும் ஒரு நாடாக மறுபிறவி எடுப்பதற்கு முஸ்தபா கமால் பாட்சா முக்கிய பங்கு வகித்தார்.

(ii) கமால் பாட்சா துருக்கி நாட்டிற்கு விடுதலையை மட்டும் பெற்றுத்தரவில்லை. அவர் துருக்கியை நவீனமயமாக்கி அதை எதிர்மறையான அங்கீகாரத்திலிருந்தும் மாற்றியமைத்தார்.

(iii) சுல்தானியத்திற்கும் கலீபாத்திற்கும் முற்றுப் புள்ளி வைத்தார். சோவியத் யூனியனின் ஆதரவு அவருக்குப் பேருதவியாய் அமைந்தது.

**6. பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான ஏதேனும் இரண்டு காரணங்களைப் பட்டியலிடுக.**

(i) பன்னாட்டுச் சங்கம் முதல் உலகப்போரில் வெற்றி பெற்ற நாடுகளின் அமைப்பாகவே காணப்பட்டது.

(ii) சங்கத்திற்கென்று இராணுவம் இல்லை என்பதால் தான் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்த அதனால் இயலவில்லை.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



**VI. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்**

**1. முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி.** *(PTA-1; Sep-2020)*

**முதல் உலகப்போருக்கான காரணங்கள் -**

**அ) ஐரோப்பிய நாடுகளின் அணி சேர்க்கைகளும் எதிர் அணி சேர்க்கைகளும் :**

(i) 1900-ல் ஐரோப்பிய வல்லரசுகளில் ஐந்து அரசுகள், இரண்டு ஆயுதமேந்திய முகாம்களாகப் பிரிந்தன.

(ii) ஒரு முகாம் மையநாடுகளான ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, இத்தாலி ஆகியவற்றைக் கொண்டிருந்தது. அவை 1882 இல் மூவர் உடன்படிக்கையை மேற்கொண்டன.

(iii) இதன்படி ஜெர்மனியும் ஆஸ்திரியாவும் பரஸ்பரம் உதவிகள் செய்து கொள்ளும். மற்றொரு முகாமில் பிரான்சும் ரஷ்யாவும் அங்கம் வகித்தன.

(iv) 1894 இல் மேற்கொண்ட உடன்படிக்கையின்படி இவ்விரு நாடுகளில் ஏதாவது ஒன்று ஜெர்மனியால் தாக்கப்படும் பட்சத்தில் பரஸ்பரம் துணை நிற்கும் என உறுதி செய்யப்பட்டது.

(v) இவ்வாறு இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய மூவரைக் கொண்ட மூவர் கூட்டு உருவாக்கப்பட்டது.

**ஆ) வன்முறை சார்ந்த தேசியம் :**

(i) தேசப்பற்றின் வளர்ச்சியோடு "எனது நாடு சரியோ தவறோ நான் அதை ஆதரிப்பேன்" என்ற மனப்பாங்கும் வளர்ந்தது.

(ii) இங்கிலாந்தின் ஆரவாரமான நாட்டுப்பற்று, பிரான்ஸின் அதி தீவிரப்பற்று, ஜெர்மனியின் வெறிகொண்ட நாட்டுப்பற்று ஆகிய அனைத்தும் தீவிர தேசியமாக போர்வெடிப்பதற்கு தீர்மானமாக பங்காற்றியது.

**இ) ஜெர்மன் பேரரசின் ஆக்கிரமிப்பு மனப்பாங்கு:**

(i) ஜெர்மன் பேரரசரான இரண்டாம் கெய்சர் வில்லியம் ஜெர்மனியே உலகத்தின் தலைவன் எனப் பிரகடனம் செய்தார்.

(ii) இந்நிலையில் ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு இயல்பு கொண்ட அரசியல் விவேகத்தையும் விரைவாகக் கட்டப்படும் அதன் கப்பற்படை தளங்களையும் கண்ணுற்ற இங்கிலாந்து, ஜெர்மன் கப்பற்படை தனக்கு எதிரானது என முடிவு செய்தது.

(iii) ஆகவே இங்கிலாந்தும் கப்பற்படை விரிவாக்கப் போட்டியில் இறங்கவே இரு நாடுகளுக்கிடையிலான பதற்றம் மேலும் அதிகரித்தது.

**ஈ) பிரான்ஸ் ஜெர்மனியோடு கொண்ட பகை ;**

(i) பிரான்சும் ஜெர்மனியும் பழைய பகைவர்கள்.

(ii) 1871 இல் ஜெர்மனியால் தோற்கடிக்கப்பட்ட பிரான்ஸ் அல்சேஸ், லொரைன் பகுதிகளை ஜெர்மனியிடம் இழக்க நேரிட்டது.

(iii) மொராக்கோ விவகாரத்தில் ஜெர்மனியின் தலையீடு இக்கசப்புணர்வை மேலும் அதிகரித்தது.

(iv) மொராக்கோவில் பிரான்சின் நலன்கள் சார்ந்து, இங்கிலாந்து பிரான்சோடு மேற்கொண்ட ஒப்பந்தத்தை ஜெர்மனி எதிர்த்தது.

**உ) பால்கன் பகுதியில் ஏகாதிபத்திய அரசியல் அதிகாரத்திற்கான வாய்ப்பு :**

(i) 1908 ஆம் ஆண்டில் துருக்கியில் ஒரு வலுவான, நவீன அரசை உருவாக்கும் முயற்சியாக இளம்துருக்கியர் புரட்சி நடைபெற்றது.

(ii) பாஸ்னியாவையும் ஹெர்சகோவினாவையும் தான் இணைத்துக் கொண்டதாக ஆஸ்திரியா அறிவித்தது. ஆஸ்திரியாவின் இவ்வறிவிப்பு செர்பியாவில் தீவிரமான எதிர்ப்பைத் தூண்டியது.

(iv) ஆஸ்திரியாவிற்கும் செர்பியாவிற்குமான இப்பகை 1914 இல் போர் வெடிக்கக் காரணமாயிற்று.

**ஊ) பால்கன் போர்கள் :**

(i) பதினெட்டாம் நூற்றாண்டின் முதல்பாதியில் தென்மேற்கு ஐரோப்பியாவில் துருக்கி வலிமை வாய்ந்த நாடாகத் திகழ்ந்தது.



www.surabooks.com



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



(ii) பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில் துருக்கியப் பேரரசின் உறுதியற்ற அரசியல் பொருளாதாரச் சூழலைச் சாதகமாகக் கொண்டு கிரீசும் அதனைத் தொடர்ந்து ஏனைய நாடுகளும் ஒன்றன் பின் ஒன்றாகத் தங்களைத் துருக்கியின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்துக் கொண்டன.

(iii) 1912 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் பால்கன் கழகம் என்ற அமைப்பை உருவாக்கின.

(iv) இக்கழகம் முதல் பால்கன் போரில் (1912 – 1913) துருக்கிய படைகளைத் தாக்கித் தோற்கடித்தன.

(v) 1913 மே திங்களில் கையெழுத்தான இலண்டன் உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது.

**எ) உடனடிக் காரணம் :**

(i) பால்கனில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில் உச்சக்கட்டம் பாஸ்னியாவிலுள்ள செராஜிவோ என்னும் இடத்தில் அரங்கேறியது.

(ii) 1914 ஆம் ஆண்டு ஜுன் 28ம் நாள் ஆஸ்திரியப் பேரரசரின் மகனான பிரான்ஸ் பெர்டினாண்டு, பிரின்ஸப் எனும் பெயரைக் கொண்ட பாஸ்னிய செர்பியனால் கொலை செய்யப்பட்டார்.

(iii) ஆஸ்திரியா இதனை செர்பியாவைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்பாக எண்ணியது.

(iv) ஆகஸ்டு திங்கள் முதல் நாள் ஜெர்மனி ரஷ்யாவிற்கு எதிராக போர் அறிவிப்பு செய்தது.

(v) பெல்ஜியத்தின் நடுநிலைமையை மதியாது அதனை ஜெர்மனி தாக்கவே இப்போரில் இங்கிலாந்து பங்கேற்பது கட்டாயமாயிற்று.

**2. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக் காட்டுக.**

**வெர்சேல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்கள் :** *PTA–2,6*

(i) போரைத் தொடங்கிய குற்றத்தைச் செய்தது ஜெர்மனி என்பதால் போரால் ஏற்பட்ட இழப்புகளுக்கு ஜெர்மனி இழப்பீடு வழங்க வேண்டும். எனவும் மைய நாடுகள் அனைத்தும் போர் இழப்பீட்டுத் தொகையை வழங்கவும் வலியுறுத்தப்பட்டன.

(ii) ஜெர்மன் படை 1,00,000 வீரர்களை மட்டுமே கொண்டதாக அளவில் சுருக்கப்பட்டது. சிறிய கப்பற்படையொன்றை மட்டும் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

(iii) ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய இரண்டின் ஒருங்கிணைப்பு தடை செய்யப்பட்டது.

(iv) ஜெர்மனியின் அனைத்துக் காலனிகளும் பன்னாட்டுச் சங்கத்தின் பாதுகாப்பு நாடுகளாக ஆக்கப்பட்டன.

(v) ரஷ்யாவுடன் செய்து கொள்ளப்பட்ட பிரெஸ்ட் – லிடோவஸ்க் உடன்படிக்கையையும் பல்கேரியாவுடன் மேற்கொள்ளப்பட்ட புகாரெஸ்ட் உடன்படிக்கையையும் திரும்பப் பெற்றுக் கொள்ள ஜெர்மனி வற்புறுத்தப்பட்டது.

(vi) அல்சேஸ்-லொரைன் பகுதிகள் பிரான்சுக்குத் திருப்பித் தரப்பட்டன.

(vii) முன்னர் ரஷ்யாவின் பகுதிகளாக இருந்த பின்லாந்து, எஸ்தோனியா, லாட்வியா, லிதுவேனியா ஆகியன சுதந்திரநாடுகளாகச் செயல்பட அனுமதிக்கப்பட்டது.

(viii) வடக்கு ஷ்லெஸ்விக் டென்மார்க்கிற்கும் சிறிய மாவட்டங்கள் பெல்ஜியத்திற்கும் வழங்கப்பட்டன.

(ix) போலந்து மீண்டும் உருவாக்கப்பட்டது.

(x) நேசநாடுகளின் ஆக்கிரமிப்பின்கீழ் ரைன்லாந்து இருக்கும் என்றும், ரைன்நதியின் கிழக்குக்கரைப் பகுதி படை நீக்கம் செய்யப்பட்டப் பகுதியாக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

**3. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.** *HY-2019*

**பன்னாட்டுச் சங்கத்தின் பணிகள் :**

(i) 1920 – 1925 ஆகிய ஆண்டுகளிடையே பன்னாட்டுச் சங்கம் பல சிக்கல்களைத் தீர்த்து வைக்க அழைக்கப்பட்டது.

(ii) மூன்று பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில் சங்கம் வெற்றி பெற்றது. 1920 இல் பின்லாந்தின் மேற்குக் கடற்கரைக்கும் சுவீடனின் கிழக்குக் கடற்கரைக்கும் இடையில் அமைந்திருந்த ஆலேண்டு தீவுகள் யாருக்குச் சொந்தம் என்பதில் பின்லாந்திற்கும் சுவீடனுக்குமிடையே பிரச்சனை ஏற்பட்டது.





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



(iii) பன்னாட்டுச் சங்கம் அத்தீவுகள் பின்லாந்திற்கே உரியது என தீர்ப்பளித்தது.

(iv) அடுத்த ஆண்டில் போலந்திற்கும் ஜெர்மனிக்குமிடையே மேலை சைலேஷியா பகுதியில் எல்லைப் பிரச்சினை ஏற்பட்டு, பிரச்சனையைத் தீர்த்து வைக்கச் சங்கம் அழைக்கப்பட்ட போது அப்பிரச்சினையைச் சங்கம் வெற்றிகரமாகத் தீர்த்து வைத்தது.

(v) 1925 இல் மூன்றாவது பிரச்சனை கிரீஸ் பல்கேரியா நாடுகளிடையே ஏற்பட்டதாகும்.

(vi) 1925 ஆம் ஆண்டு லொக்கார்னோ உடன்படிக்கை கையெழுத்தாகின்ற வரை பன்னாட்டுச் சங்கம் வெற்றிகரமாகவே செயலாற்றியது.

(vii) லொக்கார்னோ உடன்படிக்கையின் படி ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், இங்கிலாந்து, இத்தாலி ஆகிய நாடுகள் மேற்கு ஐரோப்பாவில் பரஸ்பரம் அமைதிக்கு உத்தரவாதமளித்தன.

(viii) இதன் பின்னர் ஜெர்மனி பன்னாட்டுச் சங்கத்தில் இணைந்தது. பாதுகாப்புக் குழுவிலும் நிரந்தர இடமளிக்கப்பட்டது.

(ix) இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அமெரிக்காவும் ரஷ்யாவும் சங்கத்தினுடைய அரசியல் அல்லாத நடவடிக்கைகளில் பங்கேற்கத் தொடங்கின.

## VII. செயல்பாடுகள்

**1. முதல் உலகப்போரில் ஈடுபட்ட நாடுகளின் தலைநகரங்களையும் போர்க்களங்களையும் வரைபடத்தில் குறிப்பதற்கு மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தல்**








orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores





## VIII. வரைப்படப் பணி

**உலக வரைபடத்தில் பின்வரும் நாடுகளைக் குறிக்கவும்.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | கிரேட் பிரிட்டன் | 2. | ஜெர்மனி | 3. | பிரான்ஸ் | 4. | இத்தாலி |
| 5. | மொராக்கோ | 6. | துருக்கி | 7. | செர்பியா | 8. | பாஸ்னியா |
| 9. | கிரீஸ் | 10. | ஆஸ்திரிய – ஹங்கேரி | | | | |
| 11. | பல்கேரியா | 12. | ருமேனியா | | | | |




## *PTA* வினா- விடைகள்

### 5 மதிப்பெண்கள்

**1. பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான காரணங்களை குறிப்பிடுக.** *PTA–4*

**பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான காரணங்கள் :**

(i) பன்னாட்டு சங்கம் முதல் உலகப்போரில் வெற்றி பெற்ற நாடுகளின் அமைப்பாகவே காணப்பட்டது.

(ii) சங்கத்திற்கென்று இராணுவம் இல்லை என்பதால் தான் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்த அதனால் இயலவில்லை.

(iii) அமைதிக்கான இவ்வமைப்பை உருவாக்கியவர்கள் தேசியவாதத்தின் உள்ளார்ந்த ஆற்றலை உணர்ந்திருக்கவில்லை. 'கூட்டுப்பாதுகாப்பு' பாதுகாப்பு எனும் கோட்பாட்டை நடைமுறையில் செயல்படுத்தவே முடியவில்லை.

(vi) சர்வாதிகாரிகளால் தலைமையேற்கப்பட்ட இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகள் சங்கத்தின் ஆணைகளுக்குக் கட்டுப்பட மறுத்தபோது, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் மட்டுமே உறுதியாகச் செயல்படும் நிலையிலிருந்தன.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



## அரசு தேர்வு வினா – விடை

**1 மதிப்பெண்**

1. **ஜுட்லேண்டு போரில் வெற்றி பெற்ற நாடு** *QY-2019*
   அ) ஜெர்மனி ஆ) இங்கிலாந்து இ) ரஷ்யா ஈ) பிரான்ஸ் **[விடை: ஆ) இங்கிலாந்து]**

2. **எத்தியோப்பியாவின் படைகள் இத்தாலியின் படைகளை எவ்விடத்தில் தோற்கடித்தது?** *Sep-2020*
   அ) டெல்வில்லி ஆ) ஆரஞ்சு நாடு இ) அடோவா ஈ) அல்ஜியர்ஸ்
   **[விடை: ஆ) இங்கிலாந்து]**

## காலக்கோடு

**1910 முதல் 1920 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய ஐந்து நிகழ்வுகளைக் காலக்கோட்டில் எழுதுக.** *QY-2019*




❖ ❖ ❖

www.surabooks.com



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores

# அலகு 2 இரு உலகப்போர்களுக்கு இடையில் உலகம்



## பயிற்சி

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. வியட்நாம் தேசியவாதிகள் கட்சி ________ இல் நிறுவப்பட்டது. (HY-2019)

2. [விடை: 1927]

3. முதல் உலகப்போரினால் ________ நாடுகள் நிதிசார்ந்த வகையிலும், அரசியல் ரீதியாகவும் வலிமைகுன்றின.
   அ) ஆசிய ஆ) ஐரோப்பிய இ) ஆப்பிரிக்க ஈ) ஆஸ்திரேலியா
   [விடை: ஆ) ஐரோப்பிய]

4. முதல் உலகப்போருக்குப் பின் ________ உடன்படிக்கை ஏற்படுத்திய அரசியல் சிக்கல்கள் நிலைமையை மேலும் மோசமாக்கியது.
   அ) அமைதி ஆ) வெர்செய்ல்ஸ் இ) பாரிஸ் ஈ) லண்டன்
   [விடை: ஆ) வெர்செய்ல்ஸ்]

5. 1931 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ________ தோற்கடிக்கப்பட்டது.
   அ) தொழிலாளர் கட்சி ஆ) நாசிச கட்சி
   இ) பாசிச கட்சி ஈ) ரிபப்ளிக் கட்சி [விடை: அ) தொழிலாளர் கட்சி]

6. முதல் உலகப் போரின் முடிவில் ________ வலுவான நிதி நிலையைக் கொண்டிருந்தது.
   [விடை : அமெரிக்கா]

### II. சரியான கூற்றைத் தேர்வு செய்க

1. கூற்று : தற்காப்புப் பொருளாதாரக் கொள்கையை முன்னிறுத்தியப் பொருளாதார தேசியம் எனும் புதிய அலையால் உலக வணிகம் பாதிக்கப்பட்டது.
   காரணம் : அமெரிக்கா, கடன்பட்ட நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்ய விருப்பமில்லாமல் இருந்ததனால் இந்நிலை உண்டானது. (PTA–5)
   அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி.
   ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
   இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே தவறு.
   ஈ) காரணம் சரி, ஆனால் கூற்றுக்குப் பொருந்தவில்லை.
   [விடை: ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.]



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



## III. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | டிரான்ஸ்வால் | - | ஜெர்மனி |
| 2. | டோங்கிங் | - | ஹிட்லர் |
| 3. | ஹின்டன்பர்க் | - | இத்தாலி |
| 4. | மூன்றாம் ரெய்க் | - | தங்கம் |
| 5. | மாட்டியோட்டி | - | கொரில்லா நடவடிக்கைகள் |

**விடை:**

| | | | |
|---|---|---|---|
| 1. | டிரான்ஸ்வால் | - | தங்கம் |
| 2. | டோங்கிங் | - | கொரில்லா நடவடிக்கைகள் |
| 3. | ஹின்டன்பர்க் | - | ஜெர்மனி |
| 4. | மூன்றாம் ரெய்க் | - | ஹிட்லர் |
| 5. | மாட்டியோட்டி | - | இத்தாலி |

## IV. சுருக்கமாக விடையளிக்கவும்

**1. இந்தோ-சீனாவில் நடைபெற்ற 'வெள்ளை பயங்கரம்' குறித்து நீங்கள் அறிந்ததென்ன?** *PTA-6*

(i) 1929 இல் வியட்நாம் வீரர்கள் இராணுவப் புரட்சி செய்தனர்.

(ii) பிரெஞ்சு கவர்னர் ஜெனரலைக் கொலை செய்வதற்கான முயற்சியும் தோல்வி அடைந்தது.

(iii) இதனைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட்களின் தலைமையில் மிகப்பெரும் விவசாயிகளின் புரட்சியும் நடைபெற்றது.

(iv) இப்புரட்சி ஒடுக்கப்பட்டதைத் தொடர்ந்து 'வெள்ளை பயங்கரவாதம்' என்பது அரங்கேறியது. புரட்சியாளர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர்.

**2. ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாட்டின் முக்கியத்துவம் குறித்து விவாதிக்கவும்.**

(i) இங்கிலாந்து பெருமந்தத்தின் தீய விளைவுகளைத் தனது காலனிய நாடுகளின் தோள்களுக்கு மாற்றியது.

(ii) இங்கிலாந்திற்கும் ஆங்கிலபேரரசின் உறுப்பு நாடுகளுக்கும் 1932 இல் நடைபெற்ற ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாட்டில் இருதரப்பு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

(iii) இம்மாநாட்டில் பங்கேற்ற நாடுகள் (இந்தியா உட்பட) ஏனைய நாட்டு பொருள்களைக் காட்டிலும் இங்கிலாந்து பொருள்களுக்கு முன்னுரிமை வழங்க ஒத்துக்கொண்டன.

**3. பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்தியது?**

**இந்தியா வேளாண்மையின் மீது பெருமந்தம் ஏற்படுத்தியத் தாக்கம் :**

(i) பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மைக்கும் உள்நாட்டு உற்பத்தித் தொழில்களுக்கும் மரண அடியைக் கொடுத்தது. எடுத்துக்காட்டாக வேளாண் உற்பத்திப் பொருட்களின் விலைபாதியாகக் குறைந்தது.

(ii) ஆனால் விவசாயி நிலத்திற்குக் கொடுக்க வேண்டிய குத்தகைத் தொகையில் மாற்றமேதுமில்லை. விவசாய விளைபொருள்களின் விலையைப் பொறுத்தமட்டிலும் அரசுக்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய பணம் இரண்டு மடங்காகிற்று.

(iii) விலைவாசியில் ஏற்பட்ட மிகப்பெரும் வீழ்ச்சி இந்திய தேசியவாதிகளை உள்நாட்டுப் பொருளாதாரத்தைப் பாதுகாக்கும் கோரிக்கையை வைக்கத் தூண்டியது.

**4. தங்க மதிப்பீட்டு அளவு என்றால் என்ன?**

தங்க மதிப்பீட்டு அளவு என்பது ஒரு நாணய முறை. இதில் ஒரு நாட்டினுடைய நாணயம் அல்லது காகிதப்பணம் தங்கத்தோடு நேரடித் தொடர்புடைய ஒரு மதிப்பினைப் பெற்றிருக்கும்.





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores





## VI. விரிவான விடையளிக்கவும்

1. **உலகப் போர்களுக்கிடைப்பட்ட காலத்தில் (1919-39) இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடுகள் எவ்வாறு நடைபெற்றன என்பதனைக் குறித்து வரிசையாக விவரிக்க முயற்சி செய்யவும்.**

**இந்தியாவில் காலனியாதிக்க நீக்கம் :**

**மாகாணங்களில் இரட்டையாட்சி :**

(i) இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடானது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், 1905இல் சுதேசி இயக்கத்தோடு துவங்கியது.

(ii) முதல் உலகப்போரானது விரைவான அரசியல் பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தியது.

(iii) 1919 இல் இந்திய அரசுச் சட்டம் இரட்டையாட்சி முறையை அறிமுகம் செய்தது.

(iv) அச்சட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட மாகாண சட்டசபைகளுக்கும் மாற்று அதிகாரங்களின் பட்டியலின் கீழ்வரும் சில துறைகளை இந்திய அமைச்சர்களே நிர்வகிக்கவும் வழிவகை செய்தது.

**இந்தியாவைத் தொழில்மயமாக்குவதில் நடவடிக்கைக் குறைபாடுகள் :**

(i) சர்க்கரை, சிமெண்ட் சில வேதியியல் பொருட்களுக்கு எதிர்மறையான பாகுபாட்டு மனப்பான்மையோடு வழங்கப்பட்ட பாதுகாப்பைத் தவிர காலனியப் பொருளாதாரக் கொள்கையில் மாற்றமேதுமில்லை.

(ii) ஆனால் உள்நாட்டுத் தொழில்களைப் பொறுத்தமட்டில் தொழில்நுட்பம் சார்ந்த அறிவுரைகளும், கல்வியும் வழங்குதல் புதிய துறைகள் தொடர்பாக முன்னோடித் தொழில் கூடங்களை அரசு தொடங்குதல் போன்ற வடிவங்களில் மட்டுமே அரசு உதவிகள் செய்தது.

(iii) ஆனால் ஆங்கிலேய நிறுவனங்கள் அரசின் தலையீட்டை எதிர்த்ததால் வெகுவிரைவில் இக்கொள்கையும் கைவிடப்பட்டது.

**பொருளாதாரப் பெருமந்தத்தின் போது இந்தியா :**

(i) 1929 ஆம் ஆண்டுப் பொருளாதாரப் பெருமந்தம் ஆங்கிலேய வணிக வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பெரும்சேதத்தை உண்டாக்கும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

(ii) இங்கிலாந்து பெருமந்தத்தின் தீயவிளைவுகளைத் தனது காலனிய நாடுகளின் தோள்களுக்கு மாற்றியது.

**இந்தியா வேளாண்மையின் மீது பெருமந்தம் ஏற்படுத்திய தாக்கம் :**

பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மைக்கும் உள்நாட்டு உற்பத்தித் தொழில்களுக்கும் மரண அடியைக் கொடுத்தது. எடுத்துக்காட்டாக வேளாண் உற்பத்திப் பொருட்களின் விலைபாதியாக குறைந்தது.

**1935 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டம்:**

(i) 1935 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டம், உள்ளாட்சி அரசு நிறுவனங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கியதோடு நேரடித் தேர்தலையும் அறிமுகம் செய்தது.

(ii) இச்சட்டத்தின் அடிப்படையில் நடத்தப்பட்ட தேர்தல்களில் பெரும்பாலான மாகாணங்களில் அகில இந்திய தேசிய காங்கிரஸ் அதிர்வை ஏற்படுத்தும் வெற்றியைப் பெற்றது.

(iii) ஆங்கில அரசு இந்தியாவை இரண்டாம் உலகப்போரில் ஈடுபடுத்தியதால் காங்கிரஸ் அமைச்சரவை ராஜினாமா செய்யும் கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டது.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



## அரசு தேர்வு வினா - விடைகள்

**5 மதிப்பெண்கள்**

**1. வியட்மின் கட்சியின் உதயம் குறித்து விவரிக்கவும்.** *HY-2019; Sep-2020*

(i) இந்தோ-சீனாவில் இருந்த அரசியல் கட்சிகளில் வியட்நாம் தேசியக் கட்சியே முக்கியமானது. 1927இல் உருவாக்கப்பட்ட இக்கட்சி மக்கள் தொகையில் பணக்காரர்களையும் நடுத்தரப்பிரிவு மக்களையும் கொண்டிருந்தது.

(ii) 1929இல் வியட்நாம் வீரர்கள் இராணுவப் புரட்சி செய்தனர். இப்புரட்சி ஒடுக்கப்பட்டதைத் தொடர்ந்து 'வெள்ளை பயங்கரவாதம் (White Terror)' என்பது அரங்கேறியது. புரட்சியாளர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர். வெள்ளை பயங்கரவாதத்திற்குப் பின்னர் ஹோ சி மின் மாஸ்கோ சென்றார்.

(iii) இரண்டாவது உலகப்போரின் தொடக்கத்தில் பிரான்ஸ் ஜெர்மனியால் 1940இல் தோற்கடிக்கப்பட்டது.

(iv) ஹோ சி மின்னும் அவருடைய தோழர்களும் இச்சூழலைப் பயன்படுத்தி வியட்நாமின் விடுதலையை முன்னெடுத்தனர்.

(v) 1941 ஜனவரி திங்கள் எல்லையைக் கடந்து வியட்நாம் வந்த அவர்கள் 'வியட்நாம் விடுதலை சங்கம்' அல்லது வியட்மின் எனும் அமைப்பை நிறுவினர். இது தனித்தன்மை வாய்ந்த வியட்நாமிய தேசியத்திற்குப் புதிய அழுத்தத்தைக் கொடுத்தது.

**2. ஹோ சி மின் - குறிப்பு வரைக.** *Sep-2020*

(i) ஹோ சி மின் 1890இல் டோங்கிங்கில் பிறந்தார். தனது 21 ஆவது வயதில் அவர் ஐரோப்பா சென்றார். லண்டன் உணவுவிடுதியொன்றில் சமையல்கலைஞராய்ப் பணியாற்றியபின் அவர் பாரிஸ் சென்றார்.

(ii) பாரிஸ் அமைதி மாநாட்டில் வியட்நாமின் சுதந்திரத்திற்காக ஆதரவு திரட்டினார். தினசரிகளில் அவர் எழுதிய கட்டுரைகளும் குறிப்பாக "விசாரணையில் பிரெஞ்சு காலனியாதிக்கம்" எனும் சிற்றேடு அவரை நன்கறியப்பட்ட வியட்நாமிய தேசியவாதி ஆக்கியது.

(iii) 1921இல் ஹோ சி மின் பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கியவர்களில் ஒருவராக இருந்தார். இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் மாஸ்கோ சென்று புரட்சியின் நுட்பங்களைக் கற்றார். 1925இல் 'புரட்சிகர இளைஞர் இயக்கம்' எனும் அமைப்பை நிறுவினார்.

❖ ❖ ❖





www.surabooks.com

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores

# அலகு 3 இரண்டாம் உலகப்போர்



## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்

**1. ஜப்பான் சரணடைவதாக எப்போது முறைப்படி கையெழுத்திட்டது?**

அ) செப்டம்பர் 2, 1945    ஆ) அக்டோபர் 2, 1945

இ) ஆகஸ்டு 15, 1945    ஈ) அக்டோபர் 12, 1945

**[விடை : அ) செப்டம்பர் 2, 1945]**

**2. பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுவதில் முன்முயற்சி எடுத்தவர் யார்?**

அ) ரூஸ்வெல்ட்    ஆ) சேம்பெர்லின்

இ) உட்ரோ வில்சன்    ஈ) பால்டுவின்

**[விடை : இ) உட்ரோ வில்சன்]**

**3. ஜப்பானியக் கப்பற்படை அமெரிக்க கப்பற்படையால் எங்கே தோற்கடிக்கப்பட்டது?**

அ) க்வாடல்கெனால் போர்    ஆ) மிட்வே போர்

இ) லெனின்கிரேடு போர்    ஈ) எல் அலாமெய்ன்போர்

**[விடை : ஆ) மிட்வே போர்]**

**4. அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கே வீசியது?**

அ) கவாசாகி    ஆ) இன்னோசிமா

இ) ஹிரோஷிமா    ஈ) நாகசாகி

**[விடை : இ) ஹிரோஷிமா]**

**5. ஹிட்லர் எவரை மிகவும் கொடுமைப்படுத்தினார்?**

அ) ரஷ்யர்கள்    ஆ) அரேபியர்கள்

இ) துருக்கியர்கள்    ஈ) யூதர்கள்

**[விடை : ஈ) யூதர்கள்]**

**6. ஜெர்மனியோடு மியூனிச் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பிரிட்டன் பிரதமர் யார்?**

அ) சேம்பர்லின்    ஆ) வின்ஸ்டன் சர்ச்சில்

இ) லாயிட் ஜார்ஜ்    ஈ) ஸ்டேன்லி பால்டுவின்

**[விடை : அ) சேம்பர்லின்]**

**7. எப்போது ஐக்கிய நாடுகள் சபையின் பட்டய சாசனம் கையெழுத்தானது?** *Sep-2020*

அ) ஜுன் 26, 1942    ஆ) ஜுன் 26, 1945

இ) ஜனவரி 1, 1942    ஈ) ஜனவரி 1, 1945

**[விடை : ஆ) ஜூன் 26, 1945]**

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. இராணுவ நீக்கம் செய்யப்பட்ட __________ பகுதியை ஹிட்லர் தாக்கினார். **[விடை: ரைன்லாந்து]**
2. இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகியவற்றிக்கிடையேயான ஒப்பந்தம் __________ என அழைக்கப்பட்டது. **[விடை: ரோம் - பெர்லின் டோக்கியோ அச்சு]**
3. _________ கடன் குத்தகைத் திட்டத்தைத் தொடக்கி வைத்தார். **[விடை: ரூஸ்வெல்ட்]**
4. 1940இல் ராஜினாமா செய்த பிரிட்டன் பிரதமர் __________ ஆவார். **[விடை: சேம்பர்லின்]**
5. ______ என்பது தொலைவிலிருந்தே எதிரிகளின் போர் விமானங்களைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு கருவி. **[விடை: ரேடார்]**

www.surabooks.com



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



## III. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | பிளிட்ஸ்கிரிக் | - | ரூஸ்வெல்ட் |
| 2. | ராயல் கப்பற்படை | - | ஸ்டாலின் கிரேடு |
| 3. | கடன் குத்தகை | - | சாலமோன் தீவு |
| 4. | வோல்கா | - | பிரிட்டன் |
| 5. | க்வாடல்கெனால் | - | மின்னல் வேகத்தாக்குதல் |

**விடை:**

| | | | |
|---|---|---|---|
| 1. | பிளிட்ஸ்கிரிக் | - | மின்னல் வேகத்தாக்குதல் |
| 2. | ராயல் கப்பற்படை | - | பிரிட்டன் |
| 3. | கடன் குத்தகை | - | ரூஸ்வெல்ட் |
| 4. | வோல்கா | - | ஸ்டாலின் கிரேடு |
| 5. | க்வாடல்கெனால் | - | சாலமோன் தீவு |

## IV. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்

1. **கூற்று : குடியரசுத்தலைவர் ரூஸ்வெல்ட் அமெரிக்கா தனது தனித்திருக்கும் கொள்கையை மாற்றியமைக்க வேண்டும் என்பதை உணர்ந்தார்.**

**காரணம் : அவர் 1941இல் கடன் குத்தகைத் திட்டத்தை தொடங்கினார்.** *QY-2019*

அ) கூற்றும் காரணமும் சரி.

ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் தவறு.

இ) காரணம் கூற்று ஆகிய இரண்டுமே தவறானவை.

ஈ) காரணம் சரி, ஆனால் அது கூற்றுடன் பொருந்தவில்லை.

**[விடை: அ) கூற்றும் காரணமும் சரி]**

## V. சுருக்கமாக விடையளிக்கவும்

1. **முதல் உலகப் போருக்குப் பிந்தைய உலகத்தின் மூன்று முக்கிய சர்வாதிகாரிகள் யாவர்?** *PTA–1; HY-2019*

(i) இத்தாலியின் முசோலினி

(ii) ஜெர்மனியின் ஹிட்லர்

(iii) ஸ்பெயின் பிராங்கோ.

2. **ஹிட்லர் ஜெர்மனி மக்களின் ஆதரவை எவ்வாறு பெற்றார்?**

(i) ஜெர்மனி பெருமளவு அவமானப்படுத்தப்பட்டதாக நிலவிய கருத்தைப் பயன்படுத்தி, தனது வல்லமை மிக்க சொற்பொழிவாற்றும் திறமையாலும், உணர்ச்சிமிக்கப் பேச்சுக்களாலும் ஜெர்மனியை அதன் இராணுவப் புகழ்மிக்க முந்தைய காலத்திற்கு மீண்டும் அழைத்துச் செல்வதாக கூறி அடால்ப் ஹிட்லர் மக்களை தன்பக்கம் ஈர்த்தார்.

(ii) இரண்டு அடிப்படைக் கருத்துகளை அடித்தளமாகக் கொண்டு அவர் தனக்கென ஆதரவைத் திரட்டினார். அவை ஜெர்மனியரே சுத்தமான ஆரிய இனத்தவர் எனும் இன உயர்வு மனப்பாங்கு மற்றொன்று மிக ஆழமான யூத வெறுப்பு.

3. **முத்துத் துறைமுக நிகழ்வை விவரி.** *Sep-2020*

(i) 1941 டிசம்பரில் ஹவாயிலுள்ள அமெரிக்கக் கப்பற்படைத்தளமான முத்துத் துறைமுகத்தின் மீது ஜப்பானிய விமானப்படைகள் முன்னறிவிப்பின்றி பெரும்தாக்குதலைத் தொடுத்தன.

(ii) அமெரிக்காவின் பசிபிக் கப்பற்படையை முடக்கிவிட்டால் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மீது படையெடுக்கும் போது எதிர்ப்பேதும் இருக்காது என ஜப்பான் நினைத்ததே இதற்குக்



www.surabooks.com



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



காரணமாகும். இத்தாக்குதலில் பல போர்க்கப்பல்களும் போர் விமானங்களும் அழிக்கப்பட்டன. அமெரிக்க வீரர்கள் பலர் கொல்லப்பட்டனர்.

(iii) இதனைத் தொடர்ந்து அமெரிக்கா ஜப்பான் மீது போர்ப் பிரகடனம் செய்தது.

(iv) மிக முக்கியமாக இத்தாக்குதல் பெருமளவிலான வளங்களைக் கொண்டிருந்த அமெரிக்க நாட்டை நேசநாடுகளின் அணியில் இப்போரில் பங்கேற்க வைத்தது.

## VI. விரிவான விடையளிக்கவும்

**1. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.** *(PTA–2)*

**இரண்டாம் உலகப்போரின் விளைவுகள் :**

**உலகம் இரு அணிகளாகப் பிரிதல் :**

(i) இரண்டாவது உலகப்போர் உலகின் அடிப்படையானதும் முக்கியமானதுமான பல மாற்றங்களை ஏற்படுத்தியது.

(ii) வல்லரசுகள் தலைமையிலான அணிகளைக் கொண்ட உலகம் இரு துருவங்களானது. ஒரு அணி கம்யூனிச எதிர்ப்புக் கருத்துக்களைக் கொண்ட அமெரிக்காவால் தலைமையேற்கப்பட்டது. மற்றொரு அணிக்கு சோவியத் யூனியன் தலைமை தாங்கியது. கம்யூனிச நாடுகள், கம்யூனிசமல்லாத நாடுகளென ஐரோப்பா இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

**அணு ஆயுதப் பரவல் :**

(i) அமெரிக்க ஐக்கிய நாடுகளும் சோவியத் யூனியனும் அணு ஆயுதங்களை அதிகரிக்கும் போட்டியில் இறங்கி, ஆயுதங்களைப் பெருக்கி குவித்தன.

(ii) பல நாடுகளில் இராணுவத்திற்கான செலவினங்கள உச்சத்தை எட்டின.

**பன்னாட்டு முகமைகள் :**

(i) பல பன்னாட்டு முகமைகள் குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபை, உலக வங்கி, பன்னாட்டு நிதியம் (International Monetary Fund) போன்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டன.

(ii) காலனி நீக்கச் செயல்பாட்டின் அடிப்படையில் காலனியாதிக்கச் சக்திகள் தங்களது காலனிகளுக்கு விடுதலை வழங்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளாயினர்.

(iii) அதில் இந்தியா முதலாவதாய் சுதந்திரம் பெற்றது.

## VII. மாணவர்களின் செயல்பாடுகள்

**1. உலக வரைபடத்தில் அச்சு நாடுகள், நேசநாடுகள், இரண்டாம் உலகப் போரின் முக்கிய போர்க்களங்கள் ஆகியவற்றைக் குறிக்கவும்.**








orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



## VIII. வரைபடப் பணி

**உலக வரைபடத்தில் கீழ்க்கண்டவற்றைக் குறிக்கவும்.**

**1. அச்சு நாடுகள்**




**2. நேச நாடுகள்**








orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores







3. **ஹிரோஷிமா, நாகசாகி, ஹவாய் தீவு, மாஸ்கோ, சான் பிரான்சிஸ்கோ.**




4.

## *PTA* வினா- விடைகள்

### 1 மதிப்பெண்

1. **1914 முதல் 1918 வரை மற்றும் 1939 முதல் 1945 வரை நடைபெற்ற இரண்டு போர்களும் உலகப் போர்கள் என்று குறிப்பிடப்படுவதற்கு காரணம்.** *PTA–5*

அ) மோதல்கள் நடைபெற்ற பகுதிகள் பரந்து விரிந்ததாக இருந்தன.

ஆ) ஆயுதமேந்திப் போரிட்டோர், பொதுமக்கள் ஆகியோரின் இறப்பு எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது.

இ) ஐரோப்பிய, ஆசிய, ஆப்பிரிக்கக் கண்டங்களின் பல முனைகளில் போர்கள் நடைபெற்றன.

ஈ) இவை அனைத்தும் **[விடை : ஈ) இவை அனைத்தும்]**

### 2 மதிப்பெண்கள்

1. **இரண்டாம் உலகப்போரில் பயன்படுத்தப்பட்ட ராணுவ தளவாடங்கள் எவை?** *PTA–4*

இரண்டாம் உலகப்போர் நவீனப் போராகும். டாங்குகள், போர்க்கப்பல்கள், விமானம் தாங்கிக் கப்பல்கள், நீர்மூழ்கிகள், போர்விமானங்கள், குண்டுவீசும் விமானங்கள், கனரக இராணுவ தளவாடங்களைக் கொண்டு போர்கள் நடத்தப்பட்டன.

### 5 மதிப்பெண்கள்

1. **இரண்டாம் உலகப்போரின் போது முத்து துறைமுகம் தாக்கப்பட்ட நிகழ்வு எங்கனம் முக்கியத்துவம் பெற்றதாக அமைந்தது?** *PTA–3*

(i) 1941 டிசம்பரில் ஹவாயிலுள்ள அமெரிக்கக் கப்பற்படைத் தளமான முத்துத் துறைமுகத்தின் மீது ஜப்பானிய விமானப்படைகள் முன்னறிவிப்பின்றி பெரும் தாக்குதலைத் தொடுத்தன.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



(ii) அமெரிக்காவின் பசிபிக் கப்பற்படையை முடக்கிவிட்டால் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மீது படையெடுக்கும்போது எதிர்ப்பேதும் இருக்காது என ஜப்பான் நினைத்ததே இதற்குக் காரணமாகும்.

(iii) இத்தாக்குதலில் பல போர்க்கப்பல்களும் போர்விமானங்களும் அழிக்கப்பட்டன. அமெரிக்க வீரர்கள் பலர் கொல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து அமெரிக்கா ஜப்பான் மீது போர்ப்பிரகடனம் செய்தது. சீனாவும் பிரிட்டனும் அமெரிக்காவுடன் இணைந்தன.

(iv) இதனால் ஆசிய பசிபிக் போரும் ஐரோப்பியப் போரும் ஒன்றிணைந்து ஒரு பொதுக் காரணத்திற்கான போராக மாற்றியது. மிக முக்கியமாக இத்தாக்குதல் பெருமளவிலான வளங்களைக் கொண்டிருந்த அமெரிக்க நாட்டை நேசநாடுகளின் அணியில் இப்போரில் பங்கேற்க வைத்தது.

**2. அடால்ப் ஹிட்லரின் எழுச்சி மற்றும் வீழ்ச்சி குறித்து ஒரு கட்டுரை வரையவும்.** *PTA–5*

**அடால்ப் ஹிட்லரின் எழுச்சி :**

(i) 1933 இல் ஆட்சிக்கு வந்த அவர் 1945 வரை ஜெர்மனியை ஆட்சி செய்தார்.

(ii) அடால்ப் ஹிட்லர் தனது வல்லமைமிக்க சொற்பொழிவாற்றும் திறமையாலும், உணர்ச்சிமிக்கப் பேச்சுக்களாலும் ஜெயர்மனியை அதன் இராணுவப் புகழ்மிக்க முந்தைய காலத்திற்கு மீண்டும் அழைத்துச் செல்வதாகக் கூறி மக்களைத் தன்பக்கம் ஈர்த்தார்.

(iii) தேசிய சமதர்மவாதிகள் கட்சியை நிறுவினர். இது நாசிக் கட்சி என்று அழைக்கப்பட்டது.

(iv) ஜெர்மனியரே சுத்தமான ஆரிய இனத்தவர் எனும் இன உயர்வு மனப்பாங்க மற்றும் மிக ஆழமான யூத வெறுப்பு ஆகிய இரண்டு அடிப்படைக் கருத்துக்களை அடித்தளமாகக் கொண்டிருந்தார்.

(v) வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துகளுக்கு நேரெதிராக ஜெர்மனியின் ராணுவத்தையும் ஆயுதங்களையும் அதிகரிக்கத் துவங்கினார்.

(vi) ஆயுதப் படைகளுக்கான ஆள்சேர்ப்பு, அரசாங்கத்தின் செலவில் நிறுவப்பட்ட ராணுவத்திற்குத் தேவைப்படும் ஆயுதங்களையும், ஏனைய இயந்திரங்களையும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் நிறுவப்படல் போன்றவற்றால் ஜெர்மனியின் பொருளாதாரம் புத்துயிர் பெற்றதோடு, வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சனையும் தீர்த்துவைக்கப்பட்டது.

(vii) எழுச்சிமிக்க முசோலினியின் எத்தியோப்பியப் படையெடுப்பினால் இத்தாலியுடன் கொண்டிருந்த உறவினை பிரிட்டனும், பிரான்சும் முறித்துக்கொண்ட அதேவேளையில் ஜெர்மனியும், இத்தாலியும் நட்புகொண்டன.

(viii) ஹிட்லர் 1936 ஆம் ஆண்டில் படைநீக்கம் செய்யப்பட்ட மண்டலமாகக் கருதப்பட்ட ரைன்லாந்தின் மீது படையெடுத்தார்.

(ix) 1938 இல் ஹிட்லர் ஆஸ்திரியா, செக்கோஸ்லோவாக்கியா ஆகிய நாடுகளைத் தாக்கிக் கைப்பற்றினார்.

(x) ஜெர்மன் மொழி பேசும் மக்கள் வாழ்கின்ற பகுதிகளனைத்தும் ஒரே நாடாக இணைக்கப்பட வேண்டும் என ஹிட்லர் உரிமை கோரினார்.

**அடால்ப் ஹிட்லரின் வீழ்ச்சி :**

(i) ஜெனரல் ஐசனோவரின் தலைமையிலான நேசநாட்டுப் படைகள் பிரான்ஸ் நாட்டின் நார்மண்டியின் மீது படையெடுத்தன.

(ii) ஜெர்மனிப் படைகள் மெதுவாகப் பின்னுக்குத் தள்ளப்பட்டன.

(iii) ஆனால் ஜெர்மனிப் படைகள் தொடர்ந்து எதிர்த்துப் போரிட்டதால் போர் ஓராண்டுக்கும் மேலாக நீடித்து இறுதியில் 1945 மே மாதத்தில் முடிவுற்றது.

(iv) ஹிட்லர் 1945 ஏப்ரலில் தற்கொலை செய்துகொண்டார்.

❖ ❖ ❖





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000